வருகிற 11ஆம் தேதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருவிடந்தையில் நடைபெற்ற உள்ள சென்னை விழுப்புரம் மண்டல BLA2, BLC, BDA, BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாட்டு மேடை திடல் அமைத்து வரும் பணிகளை கழக துணை பொதுச்செயலாளர் – சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா, விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியம், பி.கே.சேகர்பாபு, ஆவடி நாசர் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

சென்னை வட கிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி அமைப்பாளர்

லயன் வீ.தியாகராஜன் இல்ல திருமண விழா- மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை!

முன்னிலை ; கவிஞர் காசிமுத்து மாணிக்கம், வை.ம.அருள்தாசன்! கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தி.மு.தனியரசு எம்.சி, வாழ்த்துரை!

சென்னை, பிப். 6 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி அன்னை சிவகாமி நகரை சேர்ந்த கழகத்தின் மூத்த முன்னோடி ஏ.என்.வீராசாமி பேத்தியும் சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் - வீ. ஜெயபால் - வீ.தனசேகர் ஆகியோரது சகோதரர் திருவொற்றியூர் மேற்கு பகுதி மூன்றாவது வட்ட பிரதிநிதி வீ. தனபால் மகள் த. சூரியகலா - அன்னை சிவகாமி நகரை சேர்ந்த ஏ.ரவி மகன் ஆர். பாலமுருகன் ஆகியோரின் திருமணம் அன்னை சிவகாமி நகரில் உள்ள அங்காள பரமேஸ்வரி ஆலயத்தில் 08.02.2026 ஞாயிற்றுக் கிழமை காலை7.30 மணியளவில் நடைபெறுகிறது.

முன்னதாக 07.02.2026 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு திருமண வரவேற்பு விழா அன்னை சிவகாமி நகர் விளையாட்டு திடலில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம், திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.ம. அருள்தாசன் முன்னிலையில்

கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல.ஏ., மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு எம்.சி. ஆகியோர் வாழ்த்துகின்றனர் .

மேலும் இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், மாநில மணித உரிமை ஆணையக்குழு உறுப்பினர் வி.கண்ணதாசன் சமத்துவ மக்கள் கட்சி நிறுவனர் எர்ணாவூர் எ. நாராயணன், மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் முனைவர் ஜி.சந்திரபோஸ்,

மாநில வர்த்தக அணி நிர்வாகிகள் தி.நகர் எஸ். மோகன், சேப்பாக்கம் வி.பி மணி, பி.டி.பாண்டிச் செல்வம், மாவட்ட அவைத் தலைவர் எஸ். குறிஞ்சிகணேசன்,

என்.திரிசங்கு, பி. தமிழரசன், கே பி.சொக்கலிங்கம், என். சிவகுமார், எஸ். கோமதி சந்தோஷ், வி. கே.ஏழுமலை, எம்.ரகுநாதன், வீ.வீரமுத்து, ஆர். டி.மதன்குமார், டி.சேகர், கே.பவுல், கே.கண்ணன், எஸ்.டி சங்கர் , வி.சுரேஷ்குமார, ஆர்.பரசுராமன், வை.ம.கண்ணதாசன்,

பொன். கோ. விஜயன் இ.குமரவேல், எம்.வஜ்ரவேல், எஸ்.இளங்கோ, வழக்கறிஞர்கள் ஜி. ஷரிகரன், என்.ஜெய்சங்கர், கே.தேசிங்கு, ஆர்.நவகுமார், து.செல்வம், பி.மகேந்திரன், எம்.சேது, ஏ.புண்ணியமூர்த்தி, ஆர். மணிமாறன், எ.ஜோ.பெர்ணான்டஸ், எம்.மணிவண்ணன், எம்.தியாகராஜன், கே.கவுரி, எம்.ராஜா, பி. ரவி, கே.ஞானமணி, வை. சின்னையா, ஆர்.சுகுமார், மு.கார்த்திக்,

எம்.ஆசைத்தம்பி, இ.பூங்கொடி, ஆர். செல்லா, சி.செல்லதுரை, ஏ.அறிவழகன், தி.வெங்கடேசன், ஆர்.முரளி, பி. மணி, எ.ஆர்.பொன்முத்து உள்ளிட்ட பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவொற்றியூர் மேற்கு பகுதி துனண செயலாளர் வழக்கறிஞர் யு.எஸ்.குறளரசன், 3வது வட்ட பிரதிநிதி லயன் ஏ.ராஜேந்திரன் வரவேற்கின்றனர்!

மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஏற்பாட்டில்

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பொதுக்கூட்டம்!

டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர் பிப் 06:-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் . கும்மிடிபூண்டி தொகுதி எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ் நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டம் பெரியபாளையத்தில் ந திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் ஏற்பாடு செய்து தலைமையில் நடைபெற்றது

இதில் தலைமை செயற்குழு உறுப்பினரும். எல்லாபுரம் வடக்கு ஒன்றிய செயலாளருமான பி. ஜெ.மூர்த்தி. ஒன்றிய செயலாளர்கள் ஆ. சத்தியவேலு. டி.கே.சந்திரசேகர். கி.வேணு ஆனந்த். ஜான். பொன்னுசாமி. மணிபாலன். பரிமளம். பேரூர் செயலாளர்கள் அபிராமி குமரவேல். அறிவழகன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

மாவட்ட அவைத்தலைவர் மு. பகலவன். துணைச் செயலாளர்கள் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி. மு.கதிரவன். எம். எல்.ரவி. பொருளாளர் ரமேஷ். பொதுக்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணி. வெங்கடாசலபதி. பா.செ.குணசேகரன். ஏ.வி.ராமமூர்த்தி. பரிமளம் விஸ்வநாதன்

ஒன்றிய நிர்வாகிகள் ரவிச்சந்திரன். குணசேகரன். டில்லிசங்கர். ஜமுனா அப்புன். ரவி. சண்முகம். சிவசங்கர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி . சிறுபாண்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர்.ஆகியோர் கலந்து கொண்டு திராவிடம் மாடல் அரசின் சாதனைகளில் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி சிறப்பு உரையாற்றினார்கள் நிகழ்ச்சி முன்னதாக கன்னிகைபேர் பகுதியில் கழக மூத்த முன்னோடிகளுக்குபட்டுப் பொன்னாடை அணிவித்து பொற்கிழி வழங்கி கௌரவித்தார்கள்

நிகழ்ச்சியில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பேசியதாவது .

தமிழ்நாட்டிற்கு 500 ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய சேவைகளை 5 ஆண்டுகளிலேயே முதலமைச்சர் ஸ்டாலின் செய்துள்ளார் என்றும் அவர் 8-வது அதிசயம் என புகழாரம் சூட்டினார். கும்மிடிப்பூண்டி தொகுதியை பற்றி சொல்லி விட்டு வர சொல்லி ஒரு லிஸ்ட்டையே முதலமைச்சர் கொடுத்துள்ளார் என கூறி. சுண்ணாம்புகுளத்தில் புதிய மீன் இறங்கு தளம். பெரியபாளையம் பவானி அம்மன் ஆலயத்திற்கு புதிய கட்டிடங்கள் என கும்மிடிப்பூண்டி தொகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களை பட்டியலிட்டார். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விடியல் பயணம் அறிமுகம் செய்யப்பட்டது எனவும். விடியல் பயணத்தின் மூலம் பெண்கள் மாதந்தோறும் ரூபாய் 3000 சேமித்து வருகின்றனர் என தெரிவித்த ஜெகத்ரட்சகன். மாதந்தோறும் மகளிருக்கு 1000ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு மகளிர் உதவித்தொகை என அதிகாரிகள் பரிந்துரைத்த நிலையில். முதலமைச்சர் ஸ்டாலின் மகளிர் உரிமை தொகை என பெயரை சூட்டியதை நினைவூட்டினார். வேறு மாநிலங்களில் எங்குமே இல்லாத வகையில் காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என தெரிவித்தார். அமுத குழந்தைக்கு சிவபெருமானும். பார்வதி தேவியும் வந்து பால் கொடுத்ததை போல காலையில் குழந்தைகள் பசியுடன் இருக்க கூடாது என பள்ளிகளில் காலை உணவுத்திட்டத்தை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். இந்திரலோகம். சந்திரலோகம் பார்த்த நிலையில் தமிழ்நாட்டை எந்திரலோகமாக மாற்றிய முதலமைச்சர் என வும். இந்தியாவிலேயே வாகன உற்பத்தி தமிழ்நாட்டில் 50% நடைபெற்று வருகிறது என கூறினார். தாய். தந்தையை இழந்த குழந்தைகளுக்கு 2000 ரூபாய் உதவித்தொகை வழங்கிடும் திட்டத்தை 4 முறை முதலமைச்சராக இருந்தவர் டெல்லியில் பாராட்டியதாக கூறினார். வறுமை தான் தனது எதிரி என கூறியவர் முதலமைச்சர் ஸ்டாலின் என கூறினார். மக்களின் கோரிக்கைகளை மட்டுமே கேட்டறியாமல் உங்களது கனவை கூறுங்கள் என மக்களிடம் துணிவாக கேட்டவர் முதலமைச்சர் ஸ்டாலின் என தெரிவித்தார். உடல் நிலை சரியில்லாத போது கலைஞரை சென்னை வீட்டிற்கு வந்து நேரில் சந்தித்த மோடி.சிறிய வீட்டில் வசிக்கின்றீர்களே. டெல்லிக்கு வாருங்கள். பெரிய வீட்டில் வசிக்கலாம் என கூறிய போது. அது போதாது. 2 கோடி தொண்டர்கள் உள்ளனர். உங்கள் வீடு போதாது என அப்போது கட்சியினரை தமது குடும்பமாக பாவித்து கலைஞர் கூறியதை நினைவு கூர்ந்தார். தமிழ்நாட்டில் கொண்டு வந்துள்ள திட்டங்களை வெளி நாடுகளில் உள்ள தலைவர்களும் பின்பற்றி வருவதாக ஜெகத்ரட்சகன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தட்டுங்கள். திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும் என கூறுவார்கள் ஆனால் தட்டாமலே தருகிற ஆட்சி தற்போதைய ஆட்சி என தெரிவித்தார். நிகழ்ச்சியில்

கும்மிடிபூண்டிஎம். எல். ஏ. டி. ஜெ. கோவிந்தராஜன். முன்னாள் எம்எல்ஏ சி. ணஎச்.சேகர்.பொன்னேரிதொகுதி பொறுப்பாளர்சுரேஷ்செல்வராஜ்.மாநிலமாவட்டஅணிகளின்நிர்வாகிகள்எவ. அன்புவாணன். கன்னிகைஸ்டாலின்.வக்கில்சுரேஷ்.ஒன்றிய பேரூர் செயலாளர்கள் நா.செல்வசேகரன். மு.முரளிதரன். ஆ.ராஜா. வே. ஆனந்தகுமார் . ஆர். டி.இ.உதயசூரியன். க.சு.ஜெகதீசன். ரவிக்குமார். பி.முத்து. க.சு.தமிழ்உதயன். ருக்குமணி மோகன்ராஜ். கேசவன். அலெக்சாண்டர். கே.வி. லோகேஷ். என்.கிருஷ்ணமூர்த்தி. வி.பி.ரவிக்குமார். ஜி.பி.வெங்கடேசன். ரோஸ்பொன்னையா.க.சம்பத். ஏ.கே.சம்பத். ஜெயலலிதா சசிதரன். ரமேஷ். மணி. பாஸ்கர். ஆறுமுகம். ராஜேஷ். முகமது அலவி. தேசராணி தேசப்பான். முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன் .டி.சங்கர்.ராஜேஸ்வரி. அத்திப்பட்டு சம்ராஜ். டி.கே.முனிவேல். ஓட்டுநர் அணி அமைப்பாளர் ராஜேஷ். இளைஞரணி அமைப்பாளர் ஜ.ராஜா . மா.தீபன். தமிழகன். சேதுராமன். விக்னேஷ்வரி. கலாவதி.

உட்பட பலர் கலந்துகொண்டனர். இறுதியில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன். மொய்தீன். தனசேகர். சித்ரா முனுசாமி . பெரியபாளையம் பாபு. கார்த்திக் ஆகியோர் நன்றி கூறினர்.

இராயபுரம் சட்டமன்ற தொகுதி 48வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில், ரூ. 4 கோடியே 60 லட்சத்தில் கட்டப்படவிருக்கும் நவீன வணிக வளாகத்தின் கட்டுமான பணிகளை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி. வி. விஜயலட்சுமி விஜயகுமார், வட்டச் செயலாளர்கள் இரா. பாலன், எம்.எல்.ரவி மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோருடன் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பருத்திப்பட்டு பகுதியில் உள்ள மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் 600 மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார்கள். உடன் கல்லூரி நிர்வாக இயக்குனர் திருக்குமரன், கல்லூரி நிர்வாக தலைவர் குஞ்சிதபாதம், கல்லூரி முதல்வர் அனிதா ராமன் மற்றும் கல்லூரி மாணவிகள் கல்லூரி நிர்வாகிகள் உள்ளனர்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்

426 கௌரவ விரிவுரையாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்படவுள்ளனர்!

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தகவல்!

சென்னை, பிப்.6-

மாணாக்கர்களின் கல்விச் சேவையில் எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மேலும், 426 கௌரவ விரிவுரை யாளர்கள் தற்காலிகமாக தெரிவு செய்ய 04.02.2026 அன்று முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்துஉயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க 2025-26ஆம் கல்வியாண்டிற்கு பாடப்பிரிவுகளில் 15,000க்கும் மேற்பட்ட கூடுதல் இடங்களும், புதிய பாடப்பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், ஏழை எளிய மாணாக்கர்களின் உயர்கல்வித் தேவையினை பூர்த்தி செய்ய 37 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களில் உடனடியாக நிரந்தர ஆசிரியர்களை பணியமர்த்த இயலாத நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாணாக்கர்களுக்கான கல்வி கற்றலில் தொய்வு ஏற்படாமல் இருக்க முதற்கட்டமாக 574 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தவும் பின்னர், 823 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தவும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு, தற்காலிகமாக 1,277 கௌரவ விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக மேலும், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடப்பிரிவுகளுக்கு 306 கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்துவதற்கு ஆணையிடப்பட்டது.

இத்துடன் ஏற்கனவே வெளியிடப்பட்ட பணியிடங்கள் சேர்க்கை பெறாத 120 பணியிடங்களும் சேர்த்து ஆகமொத்தம் 426 தற்காலிக கௌரவ விரிவுரையாளர் பணியிடங்கள் 29 பாடப்பிரிவுகளுக்கு நிரப்பப்படவுள்ளது.

இது குறித்த முழு விவரங்கள் https://www.tngasa.org என்ற இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இணையதளம் வாயிலாக 04.02.2026 முதல் 09.02.2026 வரை தகுதியுள்ள நபர்கள் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்யலாம்.

தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளைப் பின்பற்றியும், கல்வித்தகுதி மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பீடுகளின் அடிப்படையிலும் கௌரவ விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்படுவர். தகுதியுள்ள நபர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

படப்பை ஆ.மனோகரன் தலைமை ! திருமுடிவாக்கம் ஏ. மணி வரவேற்புரை!

மாவட்ட அமைப்பாளர் பொன் ரமேஷ் கவி - இர. எழிலரசி இல்லத் திருமண வரவேற்பு!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் - டி .ஆர். பாலு எம்.பி. வாழ்த்துரை!

காஞ்சிபுரம் , பிப். 6

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மரம்பேடு ஊராட்சி மன்ற தலைவர் பொன் ரமேஷ் கவி இர. எழிலரசி இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (6.2.2026 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில் சிறுகளத்தூரில் அமைந்துள்ள கே. எம். பேலஸில் நடைபெறுகிறது.

இம் மணவிழா வரவேற்புக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன் தலைமை வகிக்கிறார்.

குன்றத்தூர் மத்திய ஒன்றிய செயலாளர் திரு முடிவாக்கம் ஏ. மணி வரவேற்கிறார்.

ஏ.இ .பரசுராமன், ஏ . எஸ். பாஸ்கரன், வே.சங்கர் , கோவிந்தம்மாள் தாஸ், கே. தசரதன், க. அருள், வா.கலாநிதி, கோ. வில்லியப்பன் , கே. நடராஜன், ஆர். குணசேகரன், கோவிந்தசாமி, கிருஷ்ணகிரி ஜெயராஜ், வான்மதி சங்கர், ஏகாம்பரம், எஸ். புருஷோத்தமன், தீபலட்சுமி புருஷோத்தமன், ஜோஸ்பின் வேலாயுதம், நிர்மலா, தில்லியப்பன், மணிகண்டன், பொன்னரசு, பச்சையப்பன் தேவி ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் , கழகப் பொருளாளர் மக்களவை கழகக் குழு தலைவர் டி.ஆர்.பாலு , க.செல்வம் எம்.பி., எம். எல்.ஏ.க்கள் எஸ். ஆர்.ராஜா, கு செல்வப் பெருந்தகை, வரலட்சுமி மதுசூதனன், ஆ. கிருஷ்ணசாமி, இ. கருணாநிதி மற்றும் துரைசாமி ஆகியோர் பங்கேற்று மணமக்கள் இர.தமிழன்னை மா. பிரேம்குமார் ஆகியோரை வாழ்த்துகின்றனர்

இதில் தமிழ்மாறன், எஸ். என்.ஜெயமுருகன், ஆதிசேசய்யா, திருமதி சரஸ்வதி மனோகரன், எஸ்.டி. கருணாநிதி, ஏ. வந்தே மாதரம், நா. கோபால், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், கோ. சத்தியமூர்த்தி, பட்டூர் எஸ்.ஜபருல்லா, ஆர். சதீஷ்குமார், ஏ. கருணாநிதி, தா. ஜெயக்குமார், எம்.ஆர். சீனிவாசன், கோல்ட் பிரகாஷ், எம்.ஆர். வெங்கடேசன், எஸ்.ஆர். தியாகராஜன், மு.சுப்பிரமணி, க. எழுமலை, வாசுகி மகேஷ், வி.ஹரி, மா. பரிமேலழகன், இ. விஸ்வநாதன், கே.என்.சி. சத்தியமூர்த்தி, வா. நந்தகோபால், சி. பார்த்தசாரதி, ராஜேந்திரன், எஸ். கர்ணன், குமுதா சுமன், டி..லோகநாதன், தா ஏழுமலை, என். வாசு, தூ.சுந்தர், பொன் ஜீவா, கே வாசிகரன், பூங்கொடி அரசு, எஸ். ராஜா தேசிங்கு, எஸ் சந்தானம், எஸ்.கே. துரைசிங்கம், பா. ராஜேந்திரன், வடவூர் ரவி, கா.சுகுமார், சே. ஜின்னா, கே.சுப்புராஜ், எஸ். தேவேந்திர பாபு, ஜி.கே. லோகநாதன், தா. மகேந்திரன், மலர் மு.கருணாநிதி, தி.கா. பாஸ்கரன், டி. எஸ். எம். தினகரன், டி..ஆர்.சாரதி, பெரியநாயகம், சங்கீதா வேலு, தமிழமுதன், லட்சுமி ஞானசேகரன், ஏழுமலை, சா. பாலகிருஷ்ணன், எஸ். வைரம், ஐயப்பா, தினேஷ், கந்தசாமி, மா. ரேவதி, எஸ். கோதண்டராமன், கே. எஸ். இளங்கோ, பா. அறிவொளி, ரா.திபக், மாஸ் பிரகாஷ், கா .பா. மாடலரசு, பொன் இளைய பாரதி, லோ. சுதாகர், எஸ். ஜனார்த்தனன், ஆர். நவீன் ராஜ், கவி பாரதி, பிரவீன் குமார், தமிழ்வாணன், இமானுவேல், கௌதம், ஹரி பிரசாத், சிலம்பரசன், பொன் ஜெகன், குமரவேல், இ. பாலாஜி, சே. பார்த்திபன், கோ.தீபக், பொன்மணி, தேவதர்ஷினி உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

தமிழ் தாசன் நன்றி கூறுகிறார்.

சைதை கிழக்கு பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன் பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார் ஆர்.அருணகிரி மு.பாக்கியலட்சுமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் குறித்து விளக்கி பேசினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் வே.ராஜன் முன்னிலையில் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 92வது வட்டத்திற்கு உட்பட்ட முகப்பேர் மங்கள் ஏரி பூங்கா அருகே அமைக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் உபயோகிக்கும் நிகழ்ச்சியில் கழகத்தினர் பங்கேற்றனர்.